# 1000 பௌத்த பிக்குகள் சமாதான பாதயாத்திரை மேற்கொள்ள முடிவு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 30 இதழ் 32
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-3-1995

(கொழும்பு)
சமாதான பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டு ஆயிரம் பௌத்த பிக்குகள் கொழும் பிலிருந்து விரைவில் யாழ்ப் பாணத்துக்கு செல்லவுள் ளார்கள்.
மோதலைத் தவிர்த்து சமாதான முறையில் பேச்சுக்களை நடாத்துவதற்கு அரசையும் விடுதலைப்புலிகளையும் கோருவதோடு, தற்போது அரசுக்கும் - விடுதலைப்புலிக

(4-ம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதிகள் விவகாரம்;

## உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்

[கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருக்கும் 16 யுத்தக் கைதிகள் விவகாரம் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்கத்திற்கும் விடுதலைப புலிகளுக்கும் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளது.
இதேவேளையில் மார்கோ

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான

# புலிகளின் 4 கோரிக்கைகளையும்

# அரசாங்கம் நிராகரித்துவிட்டது

## சந்திரிகா 'பிரபா'வுக்கு கடித மூலம் தெரிவிப்பு!!

[கொழும்பு]
தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கென விடுதலைப் புலிகள் அரசிடம் முன்வைத்த முக்கிய நான்கு கோரிக்கைகளையும் அரசு நிராகரிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைவர் திரு. பிரபாகரனுக்கு கடைசியாக எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## ஐ.தே.க. சார்பில் போட்டியிட ஏழாயிரம் பேர் விண்ணப்பம்

[கொழும்பு]
எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு ஏழாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.
வடக்கு -கிழக்குப் பிரதேசங்கள் தவிர நாட்டிலுள்ள 18 மாவட்டங்களிலுள்ள 10 மாநகராளுமன்றங்களுக்கும், 330 நகராளுமன்றங்களுக்கும், 190 பிரதேச சபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெறவுள்ளது.
இந்தத் தேர்தலுக்கான ஐ.தே.க.வின் வேட்பாளர் பட்டியல்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
உள்ளூராட்சி சபைத் தேர்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளின் குறைகள் போக்க மதிப்பீட்டு ஆய்வு

### கல்வி அமைச்சு ஆரம்பிப்பு!

(யாழ்ப்பாணம்)
கல்வி அமைச்சு யாழ். மாவட்ட பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளைப் போக்குவதற்காக தொகை மதிப்பீடு பற்றிய ஆய்வு ஒன்றை ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலும் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை ஆய்வுகூட வசதியின்மை தளபாட கட்டிடப் பற்றாக்குறை, பாடசாலை மாணவர் எண்ணிக்கை, ஆசி

(4ம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சருடன் 6 எம். பி.க்கள் மடு விஜயம்

(கொழும்பு)
தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளே தலைமையில் ஆறு கிறீஸ்தவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்மாதம் 18-ம் திகதி மன்னார் மடுத் தேவாலயத்திற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.
இது தொடர்பான பயண அனுமதியை பெற்றுகொள்வது சம்பந்தமாக பிரதி அமைச்சர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார்.
தரை மார்க்கமாக இக்குழுவினர் மடுவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(க - இ)

★ கடற்படையினரால்

## பருத்தித்துறையில் கைதான 3 மீனவர் நேற்று விடுதலை

[நெல்லியடி)
பருத்தித்துறைக் கடற்பரப்பில் ஸ்ரீ லங்கா கடற்படையினரால் கைதுசெய்யபபட்ட மீனவர்கள் மூவரும் 02நாட்களின் பின்னர் காங்கேசன் துறையிலிருந்து விடுதலையாகி நேற்று மாலை 4 மணிக்கு பருத்தித்துறையை வந்தடைந்தனர்.
வல்வெட்டித்துறை ஸ்ரீ முருகன் குடியிருப்பை சேர்ந்த மீனவர்களானதேசா

(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் எம்மை விறகு கொத்த வைத்தனர்

### விடுதலை பெற்ற மீனவர் தகவல்

(நெல்லியடி]
காங்கேசன்துறைக்கு விசாரணைக்கொண்டு சென்ற ஸ்ரீலங்கா படையினர் எம்மைக்கொண்டு விறகு கொத்துவித்தனர்.
இவ்வாறு கடந்த 11ம் திகதி அதிகாலை 4-30 மணிக்கு பருத்தித்துறை கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் ஸ்ரீ லங்கா கடற்படையின

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல் பேச்சுவார்த்தை காலஎல்லை தெரிவிக்குமாறு

— ஜனாதிபதி அறிவிப்பு —

(கொழும்பு)
அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு திகதி ஒன்றை நிர்ணயிப்பதற்கு முடியாத பட்சத்தில் அது சம்பந்தமான கால எல்லை ஒன்றை தெரிவிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுதலைப்புலிகளுக்கு அறிவித்துள்ளார்.
விடுதலைப்புலிகளுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் அவர்

(4ம் பக்கம் பார்க்க)

# 4-ம் கட்ட பேச்சு யாழ். நகரில் 2 நாட்கள் நடைபெறும்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான 4ம் கட்டப்பேச்சுவார்த்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். அரச தரப்புகுழுவினர் இருநாட்கள் தங்கியிருந்து இந்தப் பேச்சுவார்த்தையை மேற்கொள்வர்.
ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடாத்தும்

# உற்பத்தி எழுச்சி வாரம் - 1995

★ உற்பத்திக்கு கௌரவிப்பு

★ உற்பத்தியாளருக்கு ஊக்கம்

★ உற்பத்தி திறனுக்கு உன்னத பரிசில்கள்

★ ஆண்டுதோறும் தொடர்வது இந்நிகழ்வு

காலம்: 1995 சித்திரை 24-ம் நாள் முதல் 30-ம் நாள் வரை

மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகள்

## விவசாய போட்டிகள்

நிலம் உழுதல்
நிலம் கொத்துதல்
துலா மிதித்தல்
மாட்டு வண்டி சவாரிப் போட்டி

## கடல்வள போட்டிகள்

நீச்சல்
துடுப்பு வலித்தல்
பாய்மரம் ஓட்டுதல்
வலை பின்னுதல்
தண்டு வலித்தல்

**விண்ணப்ப முடிவுத் திகதி:**
**01 . 04 . 95**

**போட்டிகள் யாவும்**
**10.04.95ம் திகதி ஆரம்பமாகும்**

## பனை தென்னைவள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்

குட்டான் இழைத்தல்
கிடுகு பின்னுதல்
பனை மரம் ஏறுதல்
கூடிய பதனீர் உற்பத்தியாளர் தெரிவுப் போட்டி

## சிறு கைத்தொழில் போட்டிகள்

கயிறு முறுக்குதல்
தும்புத்தடி கட்டுதல்
ஈர்க்குக்கட்டு கட்டுதல்

## பொதுவான போட்டிகள்

வீதி திருத்துதல்
வாய்க்கால் திருத்துதல்
குளம் புனரமைப்பு

போட்டி விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# தொழில் சிறக்கும், தமிழீழம் பிறக்கும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள். தமிழீழம்.

(ஏ 4820)

### மணிவாக்கு

கெட்டுப் போனாலும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என்று ஒருவரும், நான் பட்டுப் போனாலும் விட்டுவிடமாட்டேன் என்று ஒருவரும் நின்றால் அங்கே நியாயத்தை நிலைநாட்ட ஒரு சபை தேவைப்படும்.

— கவிஞர் கண்ணதாசன்

# வட-கிழக்கு புனரமைப்பிற்கு உலகத் தலைவர்கள் உதவுவர்

## — சந்திரிகாவிடம் உறுதி

(ஹோபன்ஹோகன்)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் புனர் வாழ்வு, புனர் நிர்மாணத்திற்கு தேவையான எந்த உதவியையும் வழங்குவதற்கு உலகத் தலைவர்கள் பலர் முன்வந்துள்ளனர்.

டென்மார்க்கின் தலைநகர் ஹோபன்ஹோகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்தி உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவிடமே உலகத் தலைவர்கள் பலர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

மலேசியப் பிரதமர் டாக்டர் மகதீர் முகமது, பாகிஸ்தான் ஜனாதிபதி பெகாரி, தென் கொரிய ஜனாதிபதி கிம்-யுங் சாங், ஒல்லாந்து அமைச்சர் ஜேபிகோங் ஆகியோர் திருமதி சந்திரிகாவை சந்தித்தபோது குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

டென்மார்க்கின் பிரதமர் அளித்த மதியபோசன விருந்தின்போதும், டென்மார்க் மகாராணி அளித்த இராப்போசன விருந்தின்போதும் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ. பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோன் ஆகியோருடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஜனாதிபதி சந்திரிகா பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இவர்களுடனான பேச்சுக்களின்போது இலங்கையில் நாடாளுமன்ற ஜனநாயக முறையை பலப்படுத்துவதற்கு அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைகளை விளக்கினார். ஜனநாயக மயப்படுத்துதல், நல்லாட்சி, ஒளிவு மறைவின்மை, மனித உரிமைகளை பேணுதல் போன்ற அம்சங்கள் தமது அரசு முக்கிய கொள்கைகளாகக் கொண்டுள்ளதாகவும் திருமதி சந்திரிகா கூறினார்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காணத தமது அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் கூறி வடக்கு - கிழக்கில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள புனர் நிர்மாணத் திட்டங்களையும் எடுத்துக் கூறி அவற்றுக்கான அபிவிருத்தி உதவிகளையும் கோரியுள்ளார்.

-சி

## நமது நோக்கு

### ஐ. தே. க. நெருக்கடி

,,அடுத்தவர் யார்?'' என ஐ. தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கேள்வி எழுப்பி இருக்கிறார் மாகாணசபை உறுப்பினர் சோமசந்திரா ராஜபக்ஷா.

ஐ. தே. க. வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள சிறிலங்கா மக்கள் கட்சி (S L. M. P.) யின் உறுப்பினர் இவர்:

இதற்கு தலைவர் கொடுத்த பதில் என்ன தெரியுமோ?

''இதே போலத்தான் முன்பு ஜே. ஆரிடம் கேட்டோர் இன்றில்லை!

அதாவது- ஜே. ஆர். ஐ. தே. க. தலைவராக இருந்தபோது, அவருக்கு அடுத்த ஸ்தானத்திற்கு வர முயன்றவர்கள் பிரேமதாசா, லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா.

இன்று - அவர்கள் இல்லைத்தான்!

இளைஞராக உள்ள ரணில் விக்கிரமசிங்கா கட்சிக்குள் தனது நிலையைப் பலப்படுததினால், தமது செலவாக்கு என்னவாகும் என நினைத்துச் செயல்படுகிறார்கள் சில தலைவர்கள்.

எனவே தான் தமக்கெனச் சில குழுக்களைச் சேர்ப்பதும், தலைமைத்துவத்துக்கு வர முயற்சிப்பதும் தெரிகிறது.

இந்த வகையில்- சுசில் முனசிங்கா, சரத் அமுனகம போன்றோர் பெயர்கள் செய்திகளிலே வந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் - வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது உரை நிகழ்த்திய சரத் அமுனுகம நிதிப் பிரச்னைகளை ஆழமாக ஆராய்ந்து தெரிவித்த கருத்துக்கள் பலரது கவனத்தை கவர்ந்தது.

பிரபல வங்கியாளர் என். யூ. ஜெயவர்த்தனவோடு கலந்தாலோசித்து கருத்துக்கள் வெளியிட்டார் என்று சொல்லப்பட்டது.

காமினி திசநாயக்காவின் கரங்களைப் பலப்படுத்த முயன்றவர் தான் இந்த சரத் அமுனுகம

இதேவேளை - காமினி குழுவினால் பின் தள்ளப்பட்ட சிறிசேன கூரேயை மீண்டும் கொண்டுவந்து கட்சியைப் பலப்படுத்த ரணில் முயற்சி செய்து வருகிறார்.

ஐ. தே, க. தனது உட்கட்சிப் பூசல்களை எப்படித் தீர்த்துக் கொள்ளப்போகின்றது என்பது பற்றிக் கவலையில்லை.

ஆனால்-அதற்காக இனவாதத்தை மீண்டும் கிளறாது இருக்கவேண்டும்!

# உணவுச் சட்டத்தை மீறினால் 10,000 ரூபா அபராதம்

(கொழும்பு)

உணவுச் சட்டத்தை மீறுவோர் மீது விதிக்கப்படும் அபராதத்தொகையை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாட்டில் அயடின சத்துக் குறைவினால் சுகாதாரப் பிரச்னைகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில சுகாதார அமைச்சு உப்பில் அயடின் கலப்ப தொடர்பாக உணவுச்சட்ட விதிகளை கடுமையாக அமுல்செய்யவுள்ளது.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள், ஆய்வாளர்கள் போன்ற சுகாதார அமைச்சு அதிகாரிகள் மூலம் நாடெங்கிலும் சோதனைகளை நடாத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட சோதனை ஆய்வுகூடங்களில் அயடின் கலக்கப்பட்ட உப்புக்களை ஆராய்ந்து அவற்றின் தரத்தையும் பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகள் எடுககப்படவுள்ளன,

இதன்பின்னர் தேவையான தரத்திற்கு ஏற்புடையதாக இல்லாத உப்புப் பைக்கற்றுகள் பற்றி சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படும் தரம் குறைந்த உப்பை விற்கும் வியாபாரிகளுக்கு எதிராக உணவுச்சட்டத்தின் கீழ்நடவடிக்கை எடுக்கப்படும்.

அயடின் சத்துக்குறைவால் குரல்வளைசுரப்பி வீக்கம், ஊட்டச்சத்து பற்றாக்குறை, புத்திக்குறைவு போன்ற பிரச்னைகள் ஏற்படுமென வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

சி

# பாடசாலை அதிபர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி!

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. உலக வங்கியின் உதவியுடன் இடம் பெறும் இந்தப்பயிற்சி திட்டத்தின் கீழ் சுமார் 4000 பாடசாலை அதிபர்கள் கலவி நிலையங்களை முறைப்படி நிர்வகிப்பது தொடர்பான பயிற்சியைப் பெறுவார்கள்.

உரிய முறையிலான நிர்வாகம் இல்லாததினால் பல பாடசாலைகளில் கல்வித்தரம்வீழ்ச்சியடைந்துள்ளது என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் டி. பி தயாரத்ன தெரிவித்துள்ளார்.

-ரி

## இராசி பலன்

14-3-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி —30)

துவாதசி: முற்பகல் 9 13 வரை, ஆயிலியம்: முன்னிரவு 9-31 வரை, சித்தயோகம், பிரதோசவிரதம், இராகு காலம்: மாலை 3-22 முதல 4-52 வரை, சுபவேளை; 10-52 முதல் 12-22 வரை.

மேஷம்: நிம்மதிக்குறைவு, பணவிரயம், தாயார் பகை.

இடபம்: புதிய வசதி, தெய்வதரிசனம், குடும்ப சந்தோஷம்.

மிதுனம்: அதிக அலைச்சல், குறைகேட்டல், காரியதடை.

கடகம்: சமயோசித முடிவு, பணவரவு, சகோதர உதவி.

சிங்கம்: மனத்தளர்ச்சி, விசித்திர கனவு, குறுக்கீடு.

கன்னி: தொழில் நம்பிக்கை, முயற்சி வெற்றி, பயணம்.

துலாம்: மறைமுக ஆதரவு, செல்வாக்கு, நினைத்ததைச் சாதித்தல்.

விருச்சிகம்: உடல் நிலை பாதிப்பு, மனச் சங்கடங்கள், யோசனை.

தனுசு: நம்பிக்கைக் குறைவு, கடன் சுமை, வேலைக் கஷ்டம்.

மகரம்: தொழில் லாபம், பொதுப்பணிச் செலவு, வாக்குவன்மை.

கும்பம்: மீறிய பொறுப்பு, உறவினர் நன்மை, நற்செய்தி.

மீனம்: உடனிருப்பவர் தொல்லை, குடும்ப சலசலப்பு, மனஸ்தாபம்.

— ஜோஸ்யர்

# மகாராஷ்ராவில் காங். ஆட்சி சரிந்தது

(புதுடில்லி)

இந்திய அரசியல் வரலாற்றில் மகாராஷ்டிரா மாநிலத்தில் முதல் தடவையாக காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

அண்மையில் மகாராஷ்ரா, குஜராத், ஒரிஸா சட்டப் பேரவைகளுககு நடைபெற்ற தேர்தலில் மகாராஷ்ராவில் பி. ஜே. பி—சிவசேனை கூட்டணியும் குஜராத்தில் பி. ஜே, பியும் ஒரிஸாவில் காங்கிரசும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன. மகாராஷ்ராவும் குஜராத்தும் இதுவரை காலமும் காங்கிரஸின் பிடியில் இருந்துவந்தது.

மூன்று மாநிலங்களினதும் தேர்தல் முடிவுகள் வருமாறு:

மகாராஷ்ரா: மொத்த இடம்—288, அறிவிக்கப்பட்ட முடிவுகள் —244, காங்கிரஸ்—71, பி. ஜே. பி—52, சிவசேனை — 45, சி. பி. ஐ. எம்—02, ஜனதா தள்—09, சமாஜவாதி—03, பி. டபிள்யு. பி—06, சுயேச்சையும் ஏனையவையும்—46:

குஜராத்: அறிவிக்கப்பட்ட முடிவுகள்—176, பி. ஜே. பி—119, காங்கிரஸ்—44, சுயேச்சையும் ஏனயவையும் - 13.

ஒரிஸா: அறிவிக்கப்பட்ட முடிவுகள் 132, காங்கிரஸ்—71, ஜனதா தள்—41, பி. ஜே. பி—08, சி. பி. ஐ—01, ஜா. மு. மோ—04, சுயேச்சையும் ஏனையவைகளும்—07.

-சி

## பலதும் பத்தும்

### வாடகைத் தாய்!

சில சமயம் .. பெண்களுக்குக் கர்ப்பப் பையை எடுத்துவிடவேண்டிய நிலை ஏற்படும், சில வேளைகளில் முட்டையிற் கரு வளர்வதற்குப் போதுமான சூழ்நிலை ஏற்படாது; அல்லது முட்டையே பாதிப்புக்குள்ளாகலாம்.

அப்போது... இன்னொரு கர்ப்பப் பையில்தான் குழந்தை வளரவேண்டும். அப்படித் தங்களது கர்ப்பப் பையில் இடம்தந்து உதவுபவர்களைத்தான் இன்று வாடகைத் தாய் (surrogate mother) என்கிறார்கள்.

பெற்ற பிள்ளையை உரியவர்களிடம் கொடுத்துவிடும் தியாக மனப்பான்மை, நம்பிக்கை, புரிந்துணர்வு போன்ற உயர் பண்புள்ளவர்களே இப்படி உதவ வேண்டும். அல்லாவிடில்... பிறக்கும் குழந்தைகள் .. சமூகத்திற்குச் சுமைதான்.

— மயூரன்

### வரி விளம்பரம்

**நல்லினக் கோழிக்குஞ்சுகள் விற்பனைககு**

லோமன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (ஏ-4818)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மாட்டுவண்டில் சவாரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 14ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ் மாவட்டத்திலுள்ளசகல சவாரி மாட்டு உரிமையாளர்கள். ஒட்டுனர்கள். ஏவுனர்கள் மத்தியஸ்தம் வகிப்பவர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்ளுகின்றது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-14**

செவ்வாய் இரவு

08-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்து கொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
08-20 நலந்தானா - ''மிக்ரெயின்'' எனப்படும் கடுமையான தலைவலி பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
08 30 செய்திகள்
08-40 கருத்துக்களம்- இ. இராஜேவரன் எழுதிய ''புரிந்துணர்வு''
08-50 மலரும் மொட்டுக்கள்

**1995-03-15**

புதன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-14**

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதிபவை
05-15 தமிழிசை
05-30 வானொலி மதியூகம்-11
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்,

### தவக்கால நற்சிந்தனை

''உங்கள் தீச் செயலை அகற்றுங்கள்;
தீமை செய்வதை விட்டு ஒயுங்கள்''

(இசை. 1 : 16)

தீயவன் தீயவனாக வாழ வேண்டும் என்றல்ல, அவன் திருந்தி வாழவேண்டும் என்பது தான் அவர் நோக்கம். தீமைகள் எம்மை நெருக்குகின்றன. தீமைகள் எம்மைச் சூழ்கின்றன. நாம் துணிந்து தீமைகளை வெறுப்போம், ஒழிப்போம், தீச்செயலை அகற்றுவோம், நல்லவை புரிவோம், நலமாக வாழ்வோம்.

— தா. மைதிலி

உருவாகும் வாரிசுகளுக்கு
உயிலாக மரம் வைப்போம்

## இலங்கை கடற்படையால்
# இந்.மீனவர் மீது தாக்குதல் 167 சம்பவங்கள்

(சென்னை)

சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்ட 167 சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தமிழக ஆளுநர் டாக்டர் சென்னு ரெட்டி தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவாகளுக்கான இழப்பீட்டுத் தொகையை மாநில அரசு ஏற்றுக்கொண்டது. இந்த இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று தமிழக ஆளுநர் சென்னுரெட்டி கேட்டுள்ளார்

(ரி-சி-இ)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மருதனுர்மடத்தில் உள்ள மகாஜனக் கல்லூரியில் நடைபெறும.

தமிழீழ அரசியற்துறைப் பிரமுகர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

### உண்ணுவிரதிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லெப்டர் என்பவரின் தலைமையிலான சர்வதேச செஞ்சிலுவைக்குழு நேரில் சென்று உண்ணுவிரதிகளின் நிலை தொடர்பாக ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணுவிரதிகளின் உடல் நிலைமை பற்றி சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மருத்துவர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணுவிரதிகளின் உடல் நிலைமை அபாயகட்டத்தை அடைந்து கொண்டிருப்பதாகவும் படிப்படியாக அவர்கள் உணர்வற்ற நிலைக்கு சென்று கொண்டிருப்பதாக ஏற்கனவே செய்திகள் வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி

### 4-ம் கட்ட பேச்சு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளதாக கொழும்பு தமிழ்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நான்காம்கட்ட பேச்சுவார்த்தைக்குமுன் இனப்பிரச்னைக்கான அரசின் அரசியல் ஆலோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதுவிடயம் தொடர்பாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கையில், அரசியல் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துவிட்டதாகவும் எனினும் விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்து அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றும் தெரிவித்துள்ளது.

நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை கொழும்பில்நடாத்தப்படவேண்டும் என்று அரச தரப்பு விரும்புகிறது என்ற சாரப்பட ஏற்கனவே செய்திகள் வெளிவந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் பேச்சுவார்த்தைகளில் தோன்றும் இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு பிரான்ஸ் அரசாங்கத்தால் இங்கு அனுப்பப்பட்ட ஓய்வுபெற்ற இராஜதந்திரி பிரான்கொய்ஸ் மிக்ஷல் தமது நண்பர் அல்ல என்றும் ஜனுதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ராய்ட்டர் செய்தியை ஆதாரம் காட்டி இச்செய்தியை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

(க-இ)

### 1000 பௌத்த

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்குமிடையில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்தவுமே நாம் யாழ்ப்பாணத்துக்கு சமாதான யாத்திரையாகச் செல்கின்ருேம் என்று பௌத்தபிக்கு ஒருவர் தெரிவித்தார்,

ஆயிரம் பௌத்த பிக்குகள் சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்குச் செல்வது இதுவே முதல் தடவை என்றும், இந்த ஆயிரம் பிக்குகளும் பூநகரி - சங்குப்பிட்டி பாதையூடாகவே யாழ். நகருக்குள் பிரவேசிக்கத்திட்டமிட்டிருப்பதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

### யாழ். மாவட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரியர் தகுதி, ஆசிரியர் சேவை விபரம், அதிபர்கள் தரம் ஆகிய விபரங்கள் தற்போது சேகரிக்கப்படுகின்றன.

இந்த மதிப்பீடுகளை எதிர்வரும் ஜுன் மாதத்துக்கு முன்பு பூர்த்தி செய்யும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

(வி - இ)

### உள்ளூராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களில் ஐ. தே. க. சார்பில் போட்டியிடுவதற்காக இதுவரை விண்ணப்பித்தவர்களுள் 60 சத வீதமானவர்கள் 18வயதுக்கும் 28 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்கள் என கட்சியின் பொதுச்செயலர் காமினி அத்துகோறள தெரிவித்துள்ளார்.

ஐ தே. க.வின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இப்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சிவட்டாரங்கள் தெரிவிததன.

[இ]

### படையினர் எம்மை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் கைது செய்யப்பட்டு, பின் நேற்று மாலை விடுதலையாகி வந்த மீனவர்களில் மூவரில் ஒருவரான வல்வெட்டித்துறை ஸ்ரீ முருகன் குடியிருப்பைச் சேர்ந்த தம்பிஐயா தருமகுலசிங்கம் ]வயது 38] பருத்தித்துறை துறைமுகத்தில், ஈழநாடுவுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடல் வலயத்தடை நீக்கம் ஓரளவு நீக்கப்பட்டு போர் ஓய்வு ஏற்பட்டிருப்பதனுல் நாம் மூவரும் வழமையான எமது தொழிலுக்காக 11ம் திகதி அதிகாலை 4-30 மணிக்கு பருத்தித்துறை கடற்பரப்பிற்குச் சென்ருேம்.

அங்கு திடீரென வந்த ஸ்ரீ லங்கா கடற்படையினர் எம்மை நெருங்கி வந்து, எம்மில் இருவரான தேசாமயானந்தம் - தேவசிகாமணி [வயது-59], கந்தசாமி இராசேந்திரம் [வயது 49] ஆகிய இரு மீனவரையும் தமது கப்பலில் ஏற்றிஞர்கள்.

நான் ஒருவன் மட்டும் மீன்பிடிப்படகில் இருந்தவேளை அப்படகினுள் பாய்ந்த நான்கு கடற்படையினரும். என்னை சுற்றிவளைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர்

சில நிமிட நேரத்தில் கடற்படையின் கப்பல் இருமீனவருடன் காங்கேசன்துறையை நோக்கிப் புறப்பட்டது.

அக்கப்பலுக்குப் பின்னுல் நானும், கடற்படையினர் பாதுகாபபுவழங்க சென்றேன்.

காங்கேசன் துறையைச் சென்றடைந்ததும், அங்கு பொலிஸில் நாம் மூவரும் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு ஆளானுேம்.

அவ்வேளை அங்கு நின்ற படையினர் எம் மூவரையும், தமக்கு விறகு கொத்தித்தருமாறு வற்புறுத்தியமையால் ஒருநாள் முழுவதும் விறகு கொத்திக்கொடுத்தோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்ததும் எம்மை விடுவிப்பதாகக் கூறிஞர்கள்.

அதன்படி நேற்றுக் காலை சீடான்ஸர்கப்பலில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் வந்ததும், எங்கள் மூவரையும் எமது மீன் பிடிப்படகிலேயே செல்லுமாறு படையினர் பணித்தனர். அதன்படி சீடான்சர் முன்னே செல்ல நாம், எமது இயந்திரப்பட்கில் பருத்தித்துறையை வந்தடைந்தோம் என்ருர். 160

### கடற்படையினரால்

1ம் பக்கத்தொடர்ச்சி)

மயானந்தம் தேவசிகாமணி [வயது 59), கந்தசாமிஇராசேந்திரம்வயது49) தம்பிஐயா தருமகுலசிங்கம் [வயது 38) ஆகிய மீனவர்களே விடுதலையாகியவர்களாவர். 160-இ

### அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் அரசியல் பேச்சுவார்தைக்கான நல்லதொரு சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை எனக்கூறி அதை விடுதலைப்புகலிள் பின்போடுவதாக ஜனுதிபதியின் செயலர் கே. பாலபட்டபெண்டி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு தெரிவித்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் குறிப்பிட்டன.

(இ)

### தமிழ் மககளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தை அகற்றி பூநகரிப் பாதையைத் திறப்பது, பொருளாதாத் தடையை முற்ருக நீக்குவது, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளைச் சுதந்திரமாக நடமாட அனுமதித்தல், கடல் வலயச் தடைச் சட்டத்தை முற்ருக நீக்குதல் ஆகிய நான்கு கோரிக்கைகளையும் விடுதலைப் புலிகள் அரசிடம் முன்வைத்தது தெரிந்ததே.

அரசுப் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற மூனறு கட்டப் பேச்சுவார்த்தைசளிலும், விடுதலை புலிகளின் பிரதிநிதிகள் மேற்படி நான்கு கோரிக்கைகளையும் முக்கியமாக வலியுறுத்தி வந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே, ஜனுதிபதி சந்திரிகா புலிகள் தலைவர் திரு பிரபாசரனுக்கு கடைசியாக எழுதிய கடிதத்தில் மேற்படி நான்கு கோரிக்கைகளையும் அரசு நிராகரிப்பதாகவும், இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால், இராணுவ ரீதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி.இ

### கொழும்பில் தீ விபத்து

(கொழும்பு[

கொழும்பு பாலத்துறைப் பகுதியில நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் 25க்கும் அதிகமான கடைகளும், இரு வீடுகளும் எரிந்து சாம்பலாகின.

குப்பிவிளக்கு ஒன்று கவிழ்ந்ததினுலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும், இதில் யாரும் உயிரிழக்கவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர். [வி)

# காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்

## அமைச்சர் அஷ்ரப்

[கொழும்பு]

காங்கேசன்துறை உட்பட சகல துறைமுகங்களும் அபிவிருத்திசெய்யப்படவுள்ளதாக கப்பல் துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ஸார்.

துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான சட்டமூலத்தின் மீது நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டத்திற்கென பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்இவ் அபிவிருத்தி மூலம் நாட்டின் சகல துறைகளும் அபிவிருத்தி நோக்கிய இலச்கில் செயற்படமுடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். [க-இ[

# வடபகுதி அபிவிருத்திக்கு கனடா 7 கோடி ரூப உதவி

(கொழும்பு)

வடபகுதியில் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிககைகளுக்கு ஏழு கோடி ரூபாவை வழங்கவுள்ளதாக கனேடியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: கனேடிய அரசு இந்தத் திட்டத்தின் கீழ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மூன்றரைக்கோடி ரூபாவும், அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்திற்கு ஒரு கோடி ரூபாவும், மெடிசன் நிறுவனத்திற்கு 1.2 கோடி ரூபாவும், கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 1.2 கோடி ரூ-ாவும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

க இ

# நிரந்தர சமாதானம் ஏற்பட புலிகள் செயற்படவேண்டும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(நியூயோர்க்)

நிரந்தரமானதும், விரிவானதுமான சமாதானம் ஒன்றை அடைவதற்கு, விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்படவேண்டும் என அமெரிக்க அரசாங்கம் வலியுறுத்தி உள்ளதாக தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி அமைச்சர் திருமதி ரொபின் ரபேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தெற்காசியப் பிராந்தியத்தில் மனித உரிமைகள் பேணப்படுவதில், தற்பொழுது இலங்கையும் முக்கிய பங்காற்றுகின்றது.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை, காணுமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்குப் பிராந்திய மட்டத்தில் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது.

இலங்கையின் உள்நாட்டு யுததத்திற்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா மீண்டும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

க இ

## ஆனையிறவு உப்பளத்தில்
# 450 மெ. தொன் உப்பு பழுதடைந்த நிலையில்

(கொழும்ப)

ஆனையிறவு உப்பளத்தில் 450 மெற்றிக் தொன் உப்பு காணப்படுவதாகவும், அந்த உப்பை கொழும்புக்குக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்கள் உள்ளதாகவும் உப்பள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பழுதடைந்த நிலையில் காணப்படும் இந்த உப்பு பல கோடி ரூபா பெறுமதி வாய்ந்தது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

க-இ

# வெப்ப நோய்கள் யாழ். குடாவில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பத்திஞல் சின்னமுத்து, பெரியம்மை, கூகைக்கட்டுபோன்ற தொற்று நோய்களிஞல் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்கள் நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளிலேயே மிக வேகமாக பரவி வருகிறது. குறிப்பாக பாடசாலை மாணவர்களே இவற்ருல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது யாழ். குடாநாட்டு ஆஸ்பத்திரிகளில் வெப்ப நோய்க்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்தும் காணப்படுகிறது.

-71-59-சி

### கண்டெடுக்கப்பட்ட பொருள்

உடுப்புடன் துணிபாய்க் ஒன்று மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

### மண்ணெண்ணை விநியோகம்

(ஆனைப்பந்தி)

தீவக பல நோக்கு கூட்டுறவுச் ச்சங்கங்களின் பாவனையாளர்களுச்குரிய 22வது சுற்று மண்ணெண்ணை தற்போது அந்தத்த சங்கங்களின் எண்ணெய் விநியோகக் கிளிகளில் வழங்கப்படுகின்றது.

குடும்ப அட்டையொன்றிற்கு மூன்று லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் இருபது ரூபா விலையில் வழங்கப்படுவதாகதெரிவிக்கப்படுகின்றது.

- 101

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-